

கோவையில், நடைபெற்ற முப்பெரும் விழாவில் நேற்று (15.6.2024) சிறப்புரையாற்றிய கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளில் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி கூட்டணிக் கட்சிகள் சார்பாகவும் கோவை மாவட்டக் கழகத்தினர் சார்பாகவும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன், மக்கள் நீதி மய்யத்தின் துணைத் தலைவர் ஏ.ஜி.மவுரியா, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக செயலாளர் துரை வைகோ, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கோவை மாவட்ட கழகச் செயலாளர்கள் மற்றும் கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திராவிட இயக்க கொள்கை வழியே இளைஞர்களை வார்த்தெடுக்கும் கழக இளைஞரணியின் திருப்பூர் மாநகர் (வடக்கு) மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவையில் நேற்று ஆய்வு செய்தார். மக்கள் நலனையும் – கடைக்கோடி தொண்டர்கள் நலனையும் பேணுகின்ற வகையில் செயல்பட வேண்டும் என்ற நம் கழகத் தலைவர் அவர்களின் சொல்படி, இளைஞரணியினர் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், அவர்கள் பொறுப்பில் நியமிக்கப்பட்டு ஓராண்டுகள் நிறைவுற உள்ள சூழலில், நாடாளுமன்றத் தேர்தலில் ஆற்றிய களப்பணி – தலைமைக் கழகம் அறிவிக்கின்ற பணிகளில் இளைஞரணியினர் செய்து முடிக்கின்ற விதம் – பேச்சுப் போட்டி உள்ளிட்ட இளைஞரணியின் அடுத்தடுத்த முன்னெடுப்புகள் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை உள்ளிட்டவை குறித்து இளைஞர் அணிச் செயலாளரிடம் விளக்கினர்.



திருப்பூர் மாநகர் (தெற்கு) மாவட்ட இளைஞரணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவையில் நேற்று ஆய்வு செய்தார். இளைஞரணியின் மூலம் நிர்வாகிகள் ஆற்றிய பணிகளை – பங்களிப்புகளை ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகக் கேட்டறிந்தார்.



கோவையில் நேற்று நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தின் போது, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களைச் சந்தித்து, அவர்களுடைய பணிகளை ஆய்வு செய்தார்.



தி.மு.கழகத்தின் துடிப்புமிக்க கொள்கைப் படையாகத் திகழும் தி.மு.க. இளைஞர் அணியின் பணிகளை தொடர்ச்சியாக ஆய்வு செய்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதன் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று ஆய்வு செய்தார்.



கோவை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகள் குறித்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று ஆய்வில் ஈடுபட்டார். அப்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை மக்கள் பயன்பெறும் வகையில் கொண்டாடிய விதம் – இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பின் கீழ் புதிய உறுப்பினர்களைச் சேர்த்த விவரம் – நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் – தேர்தல் வெற்றிக்கு இளைஞர்களை ஒருங்கிணைத்தது உள்ளிட்டவை குறித்து இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் கேட்டறிந்தார்கள். தொடர்ந்து களப்பணியில் ஈடுபட்டு, கழகத்தின் அசைக்க முடியாத கோட்டையாக கோவை வடக்கு மாவட்டத்தை மாற்றிக் காட்ட அயராது உழைக்க அறிவுறுத்தினார்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.கழகத்தின் இதயத்துடிப்பான தி.மு.க. இளைஞர் அணியின் பணிகளை கழகத்தின் மாவட்ட அமைப்புகள் வாரியாக கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து வருவதறிவோம்! கோவையில் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின்போது திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞரணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை ஆய்வு செய்தார்.



கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், நேற்று கோவையில் ஆய்வு செய்தார். மண்டல பொறுப்பாளர் முன்னிலையில், மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை தனித்தனியாக அழைத்து, அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்ததோடு, அவர்கள் செய்துள்ள பணிகளையும் மதிப்பீடு செய்து ஆலோசனைகள் வழங்கினார்.

